வாக இருக்கின்றன. அங்கே பெருவாரியான மீனவப் பெருங்குடி மக்கள் இருக்கின்ற காரணத்தால் விகிதாச்சார அடிப்படையில் அந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளித்து அதிகமான விசைப்படகுகளை அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது அவரவர்கள் போடுகிற மனுவைப் பொறுத்து இருக்கிறது. வங்கிகள் கொடுக்கிற கடனைப் பொறுத்தும் இருக்கிறது. அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கடன் உதவி தர முன்வராத காரணத்தால்தான் மானியத் தொகை ஒதுக்கியும்கூட அதைப் பயன்படுத்த முடியாமல் போய் விட்டது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்றாண்டுகளில் அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு? நடப்பு நிதியாண்டில் அரசு மானியம் கோரியும் அது சரியாக அனுமதிக்கப்படவில்லை என்ற தகவல் இருக்கிறது. அது உண்மையா? இதுவரையில் இந்த ஆண்டு எவ்வளவு மானியத்தொகை செலவாகி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1982–83, 1983–84, 1984–85 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான மானியத் தொகை எவ்வளவு என்பதற்கான புள்ளி விவரங்கள் இப்போது இல்லை. தனிக் கேள்வி கேட்டால் அதனைச் சேகரித்துத் தருகிறேன். இப்போது 80 சதவீதம் கடனாகவும், 20 சதவீதம் மானியமாகவும் 1981–82 முதல் 1984–85 முடிய அதாவது டிசம்பர் முடிய 190 கண்ணாடி இழைப் படகுகளுக்கு அரசு ஒப்பளித்தது. ஆனால் மானியத் தொகை ஒதுக்கியும்கூட பயன்படவில்லை. தேசியவுடைமையாக்கப்பட்ட வங்கிகளோ, கூட்டுறவு வங்கிகளோ கடனுதவி தர முன்வராத காரணத்தால்தான் பயன்படுத்த முடியாமல் போய்விட்டதே தவிர, வேறல்ல.

வேலூரில் அரசு மருத்துவமனை.

50—(*வினா எண் 7516) திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு மருத்துவமனை அமைந்துள்ள இடம் குறுகிய இடமாகவும் சுகாதாரமற்ற நிலையிலும் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த மருத்துவமனையை நகருக்கு வெளியே விரிவான முறையில் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா

1987 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது மருத்துவமனை அமைந்துள்ள இடம் குறுகியதாக இருப்பினும், நல்ல சுகாதாரமான நிலையில் பராமரிக்கப்பட்டு நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

(முற்பகல் 10-20)

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் அரசு மருத்துவமனை குறுகிய இடத்தில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த அரசு மருத்துவமனையைப் பார்க்கும் போது குறுகிய இடத்தில் இருப்பதோடு மட்டுமல்லாமல் நெருக்கடியான கட்டிடங்களோடு நல்ல சுகாதாரம் இல்லாத நிலையிலும் இருப்பதாக எண்ணுகிறேன். அந்த வேலூர் மருத்துவமனைக்கு அருகிலேயே டி.பி. ஹாஸ்பிடலும் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நெருக்கடி நிலைமைகளை உணர்ந்து அந்த இடத்திலே புது மருத்துவமனை கட்டி அதை எக்ஸ்டென்ஷன் செய்து தர அரசு முன் வருமா? அதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த யோசனை தற்போது இல்லை.

திரு. கோ. இரகுபதி: தலைவர் அவர்களே, அத்தோடு மட்டுமல்லாமல் அங்கே அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்த அடுக்கு மாடிக் கட்டிடத்தை மேலும் உயர்த்துவதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லை என்றாலும் இனியாவது அங்குள்ள நெருக்கடியை உத்தேசித்து அந்தத் திட்டத்தைத் தீட்டித் தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்கு மாடிக் கட்டிடம் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நெல்லை மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம் சாம்பவர் வட கரையில் அரசு மருத்துவமனை.

51—(*வினா எண் 9185) திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் செங்கோட்டை ஒன்றியத்தில் உள்ள ''சாம்பவர் வடகரை'' பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?